தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

கிழமை இதழ்

தொகுதி- 2 | தி.பி. 2015 மீனம்-19 (1-4-84) 65 காசு இதழ் எண்: 36 பகுதி-15

அமிர்தலிங்கம் இப்பொழுதுதான் உண்மையை உணர்கிறர்!

இதற்கு அவர் எடுத்துக் கொண்ட கால இடைவெளி மிகுதி! தேவையற்றது! அக்கால இடைவெளியில் கிளர்ந்த உணர்வு தணிந்துவிட்டதே!

எதிரியை வலுப்படுத்தவே இக் காலத்தாழ்ச்சி பயன்பட்டது!

நிலஉரிமை மீட்புக்குக் காலம் மிகவும் இன்றியமையாதது!

போராட்டக் காலத்தை உருவாக்கமுடியாது; உருவான காலத்திலேயே போராட்டத்தை நடத்திக்கொள்ள வேண்டும்!

மிகக் கனிந்த காலம், தமிழீழ அரசியல் தலைவர்களின் மெத்தனத்தால் கை நழுவிப் போய்விட்டது!

இனி, இவ் விடைக்காலத்திற்குள் செய்து கொள்ள வேண்டிய முயற்சிகளைப் பற்றித் தலைவர்களும், தமிழீழ விடுதலைப் போராளிகளும் தீவிரமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்!

பாவலரேறு அவர்களின் வேண்டுகோள்!

சென்னை, மார்ச்சு 29 : தமிழீழக் கோரிக்கைத் தொடர்பாக, இலங்கையில் கூட்டப்பெற்ற வட்டமிசை மாநாட்டின் முடிவை உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில், மாநாட்டின் முடிவாக எதனையும் அறிவிக்காமல், மாநாடு மே மாதம் 5-ஆம் பக்கல் வரை, தள்ளி வைக்கப்பட்டதாக, அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டைப் பெரும்பாலோர் பெரிதும் நம்பியிருந்த நேரத்திலேயே, இம் மாநாடு எந்த நோக்கத்தில் கூட்டப் பெறுகிறது, யார் யார் இதன் பின்னணியில் உள்ளனர், அவர்கள் இந்த மாநாட்டின் நோக்கங்களை எவ்வெவ்வகையில் திசை திருப்பக் கூடும், இறுதி முடிவு எப்படியிருக்கும் என்பன பற்றியெல்லாம், தெளிவாக நாம் முன்கூட்டியே அறிவித்திருந்தோம்.

இன்னும் குறிப்பாக இலங்கை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழீழ ஒன்றிய விடுதலை அணியின் பொதுச் செயலாளரும், எவ்வாறு தவறான முடிவுக்குத் தம் போக்குகளைத் தொடர்பு படுத்திக் கொண்டார் என்பதையும், அவர்தம் நெகிழ்ச்சி நிலைகளையும் மிகவுறுதியுடன் சுட்டியிருந்தோம்.

இப்பொழுது நாம் சுட்டியிருந்த படியே, "மாநாட்டினால் பயன் ஏற்படும் என்று தம்மால் கருத முடியவில்லை" என்றும், அதனால் பெரிதும் கவலைப் படுவதாகவும் கூறியிருக்கிறார். இது காலங் கடந்த விளங்கிக் கொள்ளுதலாகும், என்பது மட்டுமன்று, இந்த மாநாட்டின் தொடக்கத்தின் பொழுது அவர் வெளியிட்ட நம்பிக்கைக் கருத்துக்கும், அதனடிப்படையில் அவர் காட்டிய நெகிழ்ச்சிக்கும் நேர் மாறானதும், பின் விளைவை உணராததுமாகும். ஒருவேளை இப்பொழுது அவர் கூறுவதும் அவர் நோக்கத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் ஒரு தந்திரக் கடைப்பிடியாகவும் இருக்கலாம். அவ்வாறின்றி, செயவர்த்தன மேல், அவர் ஏதோ ஒரு நலன் நோக்க அடிப்படையில் வைத்த நம்பிக்கையின் தளர்ச்சியை இது காட்டுமானால், அவரின் காலங் கடந்த அறிவுணர்தலையும் கூட ஒருவகையில் நாம் பாராட்டலாம்.

இவ்வகையில், இப்பொழுதுங்கூட, அவருக்கும் அவரை நம்பிக் கொண்டுள்ளன கூட்டாளிகளுக்கும் நாம் சொல்லுகிறோம், மாநாடு இன்னும் மாதக் கணக்காக அன்று, ஆண்டுக் கணக்காக நடைபெற்றாலும், அதன் முடிவு ஒன்றுதான். அது தமிழீழமாக இருக்கவே முடியாது. அதை இத்தனை முயற்சிகளுக்கும் காலக் கடத்தலுக்கும் பின்னர்தான் உணர்ந்து கொள்ள முடிந்தது என்றால், அது நம் அரசியல் அறியாமையையே காட்டும்; அல்லது நாம் மக்களை நம்ப வைத்துக் கழுத்தறுத்துக் கொண்டுள்ள சூழ்ச்சி நிலையையே காட்டுவதாகும்.

ஆனால், அவர் இன்னமும் தம்மை மக்கள் நம்பவேண்டும் என்று விரும்புவாரானால், அவர் கடந்தகால நிலைகளைக் கொண்டு, எதிர்கால உறுதிகளை இனிமேலாவது, கட்டமைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் சாணேறி முழம் சறுக்குவதென்பது, அரசியல் முயற்சிகளுக்குப் பொருந்தி வரலாம்; விடுதலை முயற்சிக்கு அந்நிலை எள்ளளவும் பொருந்தாது. விடுதலை உணர்வையும், நிலவுரிமை மீட்பு முயற்சியிலும், முன்வைத்த காலைச் சிறிது காலம், நிலை குத்தியிருக்கலாமே தவிர, பின்னிழுக்கக் கூடாது. நின்ற நிலையிலிருந்து ஓர் அடிகூட முன்னேறாமல் இருக்கலாம். ஆனால், ஓர் அடிகூட பின் வாங்க எண்ணவும் கூடாது. ஆனால், அமிர்தலிங்கத்தினது முன் அண்மைக்கால நிகழ்ச்சிகள், நெகிழ்ச்சிகளே அல்லாமல் வேறில்லை.

இந்த உணர்வு நிலைகளை அவர் உண்மையிலேயே பெற்றிருப்பாரானால், அவர் இதைப் பெறுவதற்கு எடுத்துக் கொண்ட கால இடைவெளி மிகுதியானது; தேவையற்றது. அந்தக் கால இடைவெளி, நேற்றுப் புடை திரண்டு வீறு பொங்கி எழுந்த வல்லுணர்வைப் பெரிதும் தணிவித்து விட்டதே! இன்னுஞ் சொன்னால் அவரால் விட்டுக் கொடுக்கப்பட்ட காலத்தாழ்ச்சி எதிரி தன்னை வலுப்படுத்திக் கொள்ளவும், நம்மை நாம் வலுக் குறைத்துக் கொள்ளவுமே பயன் படுத்தப் பெற்றது என்றால். அதை அமிர்தலிங்கம் ஏற்றுக் கொள்ளவே வேண்டும். அல்லாவிடில் அவரின் இன்றை

— தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத் தொடர்!

1. வரும் தி.பி. 2015 விடை 8(21-5-1984) முதல் விடை 17 (30-5 84)முடிய உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தன் தொண்டர்களுக்கென முதல் பயிற்சி வகுப்பை, மதுரை மாவட்டம், நிலக்கோட்டைவட்டம், அணைப்பட்டி என்னும் ஊரில் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

2. மேற் கூறப்பெற்ற 10 நாள்களிலும், சிறந்த தலைப்புகளில் 30 பயிற்சி வகுப்புகளும், கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் 3 சிறப்புரைகளும், 5 கலந்துரையாடல்களும், 2 இசை நிகழ்ச்சிகளும் 1 நாடகமும், பின்காணும் அட்டவணைப்படி நடைபெறும்.

3. பயிற்சி நடைபெறும் ஊரும் இடமும் மிகச்சிறந்த இயற்கைச் சூழலிலும் வையை ஆற்றங்கரையிலும் நடைபெறும். பயிற்சி பெறுவோர்க்கு உணவும் உறையுளும் இலவயம், எனினும் பயிற்சிக்கு ஆகும் செலவுகளை ஈடுகட்ட பயிற்சி பெறவிரும்புவோரிடமிருந்து உருபா 50 மட்டும் பயிற்சிக் கட்டணமாகத் தண்டப் பெறுகிறது. கட்டணம் செலுத்திப்பதிந்து கொள்ளாதவர்கள் வகுப்புகளில் சேர்த்துக்கொள்ளப் பெறமாட்டார்கள். குறிப்பிட்ட எண்ணிக்கை உடைய பயிற்சியாளர்களே சேர்க்கப் பெறுவதால் பதிவுக்கு முந்துக!

4. வகுப்பில் நடத்தப் பெறும் உரைகளைக் கேட்க விரும்பும் பொதுமக்களும் பார்வையாளர்களும் ஒவ்வொருநாளும் நடைபெறவிருக்கும் அனைத்து வகுப்புகளுக்கும் உரு.2மேனி, பார்வைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். இசை நிகழ்ச்சிகளுக்கும், நாடகத்திற்கும் பார்வையாளர்கள் நிகழ்ச்சி ஒன்றுக்குத் தனிக் கட்டணமாக உருபா 2 செலுத்துதல் வேண்டும்.பயிற்சிக் கட்டணம் செலுத்திப் பதிந்து கொண்ட மாணவர்களுக்கு எந்தத் தனிக் கட்டணமும் தண்டப்பெற மாட்டாது.

5. பயிற்சிக்கு வர விரும்பும் தொண்டர்கள் அனைத்து முன்னேற்பாடுகளுக்கும் உகந்த வகையில், தம் விருப்பு இசைவையும், கட்டணம் உருபா 50 ஐயும் 15-4-84 குள் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பித் தரல் வேண்டும். அதற்குப் பின் வரும் கட்டணங்களும், விருப்பிசைவும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப் பெறமாட்டா.

6. பத்து அகவைக்கு மேல் 13 அகவைக்குள்ளசிறுவர்களுக்கும் மாணவர்களுக்கும் பயிற்சிக் கட்டணம் உருபா 25-ஆகும். பத்து அகவைக்குக் கீழ் உள்ள சிறுவர்கள் தம் பெற்றோருடன் வரலாம். அவர்களுக்குக் கட்டணம் இல்லை. ஆனால் அவர்களை அழைத்துவரும் பெற்றோர் அல்லது உறவினர் முன் கூட்டியே அதன் விளக்கத்தைத் தலைமைக் கழகப் பொறுப்பாளர்க்குக் கட்டாயம் தெரியப்படுத்துதல் வேண்டும்.

7. விடுபட்ட அல்லது தேவையான பிற விளத்தங்கள் இனி வரும் தமிழ்நிலம் தென்மொழி இதழ்கள் வழியாகத் தெரிவிக்கப் பெறும்.

8. நிலைமைக்கும் தேவைக்கும் தக்கபடி வகுப்புத் தலைப்பும், பயிற்றாசிரியரும் மாற்றம் பெறலாம்.

கழகமுதல்வர் கட்டளைப்படி,
தென்னவன்கோ. க.மு,
துணைப்பொதுச் செயலாளர்.

உ.த.மு.க.
'தலைமயகம்' சென்னை-5.
20-2-84

உ.த.மு.க. கொள்கை உரவோர் முதல் பயிற்சி வகுப்புத்தொடர்

இடம் : அணைப்பட்டி (நிலக்கோட்டை வட்டம், மதுரை மாவட்டம்)

நாள் : தி.பி. 2015, விடை 8, (21-5-1984) முதல் தி.பி. 2015 விடை 17 (30-5-1984) வரை

நாள்	நேரம் மணிமுதல்/மணிவரை	உரைத்தலைப்பு	உரை நிகழ்த்துவோர்
விடை 8, திங்கள் (21-5-84)	காலை 8—10—11 30	1. தமிழ் இலக்கண அமைப்பு	பேரா.அரங்கச்செல்வன், க.மு. அரசினர் கல்லூரி, கோபி
		2. முதன் மாந்தவியல்	திரு. குழந்தைவேலன், க.மு, கல்வெட்டாய்வாளர்,
	மாலை 3—4-30	3. பாவேந்தரின் பாடல்கள்	புலவர். பொதிகைச் செல்வன்
	6—9-00	கலந்துரையாடல்	
விடை 9, செவ்வாய் (22-5-84)	காலை 8—9-30	4. தமிழ் இலக்கிய அமைப்பு	பேரா. காளிமுத்து, க.மு., கலை, பண்பாட்டுக் கல்லூரி,
	10—11-30	5. பழந்தமிழகம்	பேரா'கோ.தங்கவேலனார்.கமு
	மாலை 3—4-30	6. பிற்காலத் தமிழகம்	இல. இ. மெய்:ப. (வரலாற்றுத் தலைமைப் பேராசிரியர், சென்னை) மாநிலக் கல்லூரி,
	6—9-00	நெல்லை, செல்வத்தாயம்மாள் செந்தமிழ் வில்லிசைக் குழுவினர் வழங்கும், பாவலரேறு அவர்களின் 'ஐயை' வில்லிசை	
விடை 10, அறிவன் (23-5-84)	காலை 8--9-30	7. வரலாற்றிலக்கியம்	புலவர். கடலூர் மணிமாறன்
	10--11-30	8. இனமுன்னேற்ற முன்னறிவோன் திருவள்ளுவப் பேராசான்	திருக்குறள்மணி திரு சி.அரசிறைவன், அறி இ.
	மாலை 34--30	9. தற்காலத் தமிழகம்	தென்னவன்கோ, க.மு,
	6—9-00	கலந்துரையாடல்	
விடை 11, வியாழன் (24-5-84)	காலை 8—9-30	10. சமய இலக்கியம்	புலவர். சிவசங்கு
	10—11-30	11. தமிழினம்-தாழ்ச்சியும்-வீழ்ச்சியும்-மீட்சியும்	திரு இரணியன், க.மு.ப.இ,
	மாலை 3--4-30	12. எதிர்காலத் தமிழகம்-தமிழீழம்	ஈழவேந்தன்
	6—9-00	கலத்துரையாடல்	
விடை 12, வெள்ளி (25-5-84)	காலை 8—9-30	13. பாவாணர் மொழியியல் முயற்சிகள்	சொல்லாய்வறிஞர் ப. அருளி
	10—11·30	14. பெரியார் இனவியற்கொள்கை	புலவர் குமர: தன்னொளியன்.
	மாலை 3—4.30	15. தமிழியப் பொதுவுடைமை	மார்க்கிய அறிஞர். குணா
	6—9-00	கோட்டை இராவணன் வழங்கும் 'விடியலைநோக்கி'-நாடகம்:	
விடை 13, காரி (26-5-84)	காலை 8—9-30	16. எதிர்காலத் தமிழகம்-தனித்தமிழ்நாடு	புலவர் தமிழ்மாறன், க.இ,
	10—11.30	17. பழந்தமிழிசை	பேரா. வீ.ப.கா. சொல்லழகனார்
	மாலை 3—4.30	18. தமிழீழ விடுதலைப் போராட்டம்:	திரு: முகுந்தன், தலைவர் தமிழீழ மக்கள் விடுதலைகழகம்.
	6—9	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் மொழியியற் சிறப்புரை.	
விடை 14, ஞாயிறு (27-5-84)	காலை 8—9.30	19. பழந்தமிழ் நாடகப்பாங்கு	பாவலர் தஞ்சைவாணன், க.மு, சென்னை.
	10—11.30	20. தமிழின நாகரிகப் பரவல்	திரு: நா முத்துக்குமரன்,அறி.இ,
	மாலை 3—4.30	21. பழந்தமிழரின்போர்க்கலைகள்	பேரா: செயப்பிரகாசர்.
	6—9.00	கலந்துரையாடல்	
விடை 15, திங்கள் (28-5-84)	காலை 8—9.30	22. மொழியியல் கொள்கை	சொல்லாய்வறிஞர் ப. அருளி
	10—11.30	23. தமிழர் கலைகள்	வணி. இ, க.மு, ச:இ, திரு அறவாழிஉடுமலைப்பேட்டை
	மாலை 3—4.30	24. பாவலரேறு அவர்களின் இசைப் பாடல்கள் (விளக்கவுரை)	தென்மொழி நா. இளமாறன்
	6—9.00	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் இனவியற் சிறப்புரை	
விடை 16, செவ்வாய் (29-5-84)	காலை8—9 00	25. வாழ்வியல்	திரு மா. பூங்குன்றன், க.மு. தமிழ்ப்பல்கலைக் கழகம், சென்னை.
	10—11.30	26. தற்காலக் கலப்படஅரசியல்	தென்மொழி ப. முருகவேள்
	மாலை 3—4·30	27. பாவலரேறு அவர்களின் பாடல்கள்(விளக்கவுரை)	பேரா. அரசேந்திரன், க.மு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
	6—9.00	கல்லை, அருட்செல்வனின் 'இன்னுமா தூக்கம்?'	வில்லிசை அரங்கேற்றம்
விடை 17, அறிவன் (30-5-84)	காலை 8—9.30	28. இயல்பறிவியல்	பேரா. இல.க: இரத்தினவேல் க.மு,
	10—11.30	29. தமிழர் பண்பாடு	திரு இரா. பாவாணன், அறி.இ,
	மாலை 3—4.30	30. பாவலரேறு அவர்களின் கட்டுரைகள்	தென்னவன்கோ, க.மு,
	5—6.30	ஐயந்தெளிதல் : கலந்துரையாடல்.	
	இரவு 7—10.30	கழக முதல்வர் பாவலரேறு அவர்களின் நாட்டியற் சிறப்புரையும் நிறைவுரையும்	

வகுப்பு இடைவேளைகளில் பவானியில் நடைபெற்ற பாவலரேறு அவர்களின் திருக்குறள்—தொடர் சொற்பொழிவுகளும், உ.த.மு.க. தொடக்க மாநாட்டு இசை நிகழ்ச்சியும், பாவலர் தஞ்சை -வாணன் அவர்களின் "களம் கண்ட பாவலன்" நாடகமும் ஒலிபரப்பப்படும். பத்துநாள்

தொகைகள் பணவிடை வழியே அனுப்பவேண்டும். நேரிலும் தரலாம். நன்கொடைகளும் வரவேற்க பெறுகின்றன.

தொடர்புக்கும் தொகை விடுப்பதற்கும்:
மா. பொழிலன், 'தமிழ்நிலம்'
சென்னை—600 005.

அன்புடன்,
தென்மொழி நா. இளமாறன்.
பயிற்சி வகுப்பு அமைப்பாளர்.

பயிற்சி வகுப்பு மேற்பார்வை: தென்னவன்கோ: துணைப்பொதுச் செயலர்.

மேனாள் சட்டப்பேரவை உறுப்பினரும் இனஎழுச்சி மறவருமாகிய திரு ஆ. முனியாண்டி. அவர்களின் திருமகனார் திரு. மு. அறிவழகன், க. மு, அவர்கள் பத்துநாளும் உணவு வழங்குவதற்கு அன்புடன் இசைந்துவுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தொண்டர்கள் நல்ல வாய்ப்பை நழுவ விடவேண்டாம்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும் !
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழினமுன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனர்

தொகுதி-2 இதழ் எண் : 36 (1-4-84) பகுதி 15

தமிழ்வழிக் கல்வி கற்க மாணவர் முன்வராமைக்கு அரசே காரணமாகும்!

தமிழ் நாட்டில் தமிழ் பயிற்று மொழியாக உள்ள திட்டம் நடைமுறைக்கு வந்து 17 ஆண்டுகள் ஆகின்றன. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு உரு 180 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இருப்பினும், 10 முதல் 12 விழுக்காட்டு மாணவர்களே தமிழ் வகுப்புகளில் சேருகின்றனர். தமிழ்நாட்டில் உள்ள 187 கலைக் கல்லூரிகளில் 53 அரசுக் கல்லூரிகளில் மட்டுமே தமிழ் பயிற்று மொழியாக உள்ளது. அவற்றில் படிக்கும் மொத்தம் 1,88,029 மாணவர்களுள் 19,812 மாணவர்களே (ஏறத்தாழ 10 விழுக்காட்டினரே) தமிழில் படிக்கின்றனர். தமிழ்நாட்டில் சென்னை, மதுரை ஆகிய இரண்டு சட்டக் கல்லூரிகளிலும் ஏறத்தாழ மூவாயிரம் மாணவர்கள் சட்டம் பயில்கின்றனர். அவர்களில் 163 பேரே தமிழ் வழியாகப் படிக்கின்றனர். மீதியுள்ள திருச்சி, கோவை ஆகிய சட்டக் கல்லூரிகளில் தமிழ் வாயிற் கல்வி இனிமேல்தான் அறிமுகம் செய்யப்பட வேண்டும்.

இந்நிலைகளில் தமிழ் வாயிற் கல்வித்திட்டம் வெற்றி பெறவில்லையென்றும், தமிழ்ப் பயிற்று மொழியாகப் படிக்கும் மாணவர்களிடம் ஒருவகைத் தாழ்வு மனப்பான்மை காணப்படுகிறது என்றும், இதுவே இந்த வகுப்பில் மாணவர்கள் சேர முன்வராமைக்குக் காரணம் என்றும் பலவாறாகக் கூறப் பெறுகின்றன.

இவ்வகையில், இக்கருத்துகளைப் பற்றி நாம் சில எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. அரசு இத்திட்டத்தைக் கொண்டு வரும் போது, இதன் நோக்கத்தை எண்ணிப் பார்த்த அளவு விளைவை எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டது என்றே நாம் சொல்ல வேண்டும். ஒரு திட்டத்தை வெறும் திட்டம் என்பதற்காகவே எவரும் வரவேற்கவோ, அதற்கு ஒத்துழைக்கவோ முன் வந்து விட மாட்டார்கள். அத்திட்டத்தால் விளையும் பயன் என்ன என்பதைப் பற்றி நன்கு ஆராய்ந்த பின்னரே அதனை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள முன் வருவர். அதுபோலவே, தமிழ் வாயிற் கல்வித் திட்டத்தால் மாணவர்களுக்கு என்ன பயனை அரசு உறுதி செய்திருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்த்தால், அஃது ஆண்டுக்குத் தருகிற வெறும் 180 உருபாதான் என்று தெளிவாகத் தெரிகிறது. இந்த மிக எளிய உதவித் தொகைக்காக எவரும் தமிழ் வாயிற் கல்வியைக் கற்க முன் வந்து விட மாட்டார்கள். இதே உதவித் தொகையை ஆங்கிலயோ, இந்தியோ படிப்பவர்க்குத் தந்து, தமிழில் படிப்பவர்க்குத்தான் அரசில் வேலை என்று சொன்னால், ஆங்கிலம், இந்தி வழியாகப் படிப்பதற்கு மாணவர் ஒருவரும் முன்வர மாட்டார்கள் என்பது திண்ணம்!

ஆங்கிலத்தில் படித்தால்தான் வேலை வாய்ப்பு அதிகம் என்னும் நிலையும், தமிழில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர எந்த வகை முன்னுரிமையோ சலுகையோ இல்லை என்னும் நிலையும் உள்ளவரை தமிழில் படிக்க எவர்தாம் முன்வர முடியும்? இந்த நிலையில் தமிழில் படித்தால் வேலை கிடைப்பது அரிது என்னும் அச்சம் மாணவர்களிடையில் இருப்பது இயற்கைதானே. ஏனவே, அயல் நாட்டு மொழியான ஆங்கிலத்துக்கும், அயல் மாநில மொழியான இந்திக்கும் தரும் சலுகைகளைத் தமிழ்மொழி வாயிலாகப் படிப்பவர்களுக்குத் தருவதாக அரசு உறுதி செய்தால் தவிர, தமிழில் படிக்க ஒருவரும் முன்வரார். ஆகையால் இதைவைத்துக் கொண்டு, தமிழில் படிப்பதை மாணவர்கள் எவரும் விரும்பவில்லை என்று முடிவுகட்டுவது பெருந்தவறும், தாய்மொழியாகிய தமிழுக்கு இழைக்கப்படும் இரண்டகமும் ஆகும். தமிழில் படிப்பதால் வேலை கிடைக்காது என்ற நிலையிலும், 10 அல்லது 12 விழுக்காட்டினர், தமிழ்வாயிற் கல்வி கற்பதற்கு முன்வரும் நிலையொன்றே, தமிழ்ப்பற்றுக்குச் சான்று பகரும் தகுந்த எடுத்துக் காட்டாகும்.

எனவே, தமிழ்வழிக் கல்வி முழுவெற்றியடைய வேண்டுமானால், அரசே அதன் வேலைவாய்ப்புக்கு முன்னுரிமை மட்டுமன்று, முழுஉரிமையும் உறுதிப்பாடும் சட்ட முறையாகத் தர ஏற்பாடு செய்யவேண்டும். அதுவரை, மாணவர்கள் தமிழில் படிக்க முன்வரவில்லையே என்று சொல்வதும், தமிழ்ப்பயிற்று மொழித் திட்டம் தோல்வியடைந்துவிட்டது என்று கூறுவதும் கொடுமையும், திட்டத்தைத் திசை திருப்புவதும் ஆன முயற்சியும் ஆகும் என்று தமிழக அரசும் மக்களும் விளங்கிக்கொள்ள வேண்டும். அரசு, மேலும் இத்திட்டத்திற்குப் போதுமான சட்டங்களை இயற்ற உடனே முன்வருமாக.

இலண்டனில் உள்ள தமிழீழத் தமிழர் இப்பொழுதைக்கு நாடுகடத்தப்பட மாட்டார்கள்

சென்ற ஆண்டு சூலை மாதக் கலவரத்துக்குப் பின் இலங்கையிலுள்ள தமிழர்கள், குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் பிரிட்டன், பிரான்சு, செருமனி, கனடா, ஆத்திரேலியா முதலிய நாடுகளுக்கெல்லாம் சென்று அங்கு அரசியல் அடைக்கலம் வேண்டித்தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

அவ்வாறு இலண்டனில் குடியேறி வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களை அண்மையில் அப்புறப்படுத்த பிரிட்டிசு அரசு முடிவு செய்தது,

ஆனால், அனைத்துலக மன்னிப்புக் கழகமும், பிற அமைப்புகளும் வேண்டிக் கொண்டதன் வழி, பிரிட்டிசு அரசு, இப்பொழுதைக்கு அவர்களை நாடுகடத்தாது என்றுதெரிகிறது.

இதுபற்றி, அனைத்துலக மன்னிப்புக் குழுவின் தலைவரும் இயக்குநருமான திரு. செனட் சோன்சுரோன், பிரிட்டிசு அமைச்சர் திரு. டேவிட் வாடிங்டன்னுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:

"இலங்கையில் கடந்த ஆண்டு சூலை மாதம் நடைபெற்ற இனக்கலவரத்தின் தாக்கங்கள் தமிழர்களுக்கு இன்னும் தொடர்ந்து இருந்து வருகின்றன. தாக்குதல்கள், தடுப்புக் காவல்கள், உறுப்புச் சிதைவுகள், கொலைகள், கொள்ளைகள், தீவைப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கு அங்குள்ள தமிழர்கள் இன்னும் உள்ளாகி வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கைத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பிவைப்பது அவர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையையும், பெருத்த தீங்கையும் விளைவிப்பதாகும்.

ஆகையால் இப்போதைக்கு அவர்களைத் திருப்பியனுப்புவது நல்லதன்று. எனவே அதுபற்றிப் பிரிட்டிசு அரசு நன்கு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். இலங்கையில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படும் வரை பிரிட்டனில் உள்ள இலங்கைத் தமிழரை இலங்கைக்கு அனுப்ப வேண்டாம்" என்று அக்கடிதத்தில் அவர் அரசை வேண்டியுள்ளார்.

மேலும் அவர் அதில் கூறுவதாவது: இலங்கைத் தமிழர்கள் பலர் பிரிட்டனில் அரசியல் புகலிடம் கோரி வேண்டுகை அனுப்பியுள்ளனர். அவற்றை அரசு புறக்கணிப்புச் செய்யக் கூடாது. நன்றாக அவற்றை ஆராய்ந்த பின்னரே முடிவெடுக்க வேண்டும். அரசியல் அடைக்கலம் கோருபவர்களை மேலும் ஆறு மாதத்திற்குப் பிரிட்டனிலேயே தங்கச் செய்ய வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்

இதற்கிடையில் இலங்கையில் இயல்பான அரசியல் நிலை தோன்றவில்லை. என்றும், எனவே தமிழ் இளைஞர்களை நாடு கடத்தக் கூடாது என்றும் பிரிட்டிசு அமைச்சரின் வேல்சு மாநிலத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு. டபிட் விக்லியின் தலைமையில் மூவர் கொண்ட குழு ஒன்றும் முறையீடு செய்து கொண்டுள்ளது.

— தொடர்ச்சி 6-ஆம் பக்கம்.

உண்மை அறிஞரின் உவகை.

பாவலரேறு அவர்களுக்கு,

வணக்கம் பல. நான் உண்மையிலே தங்களின் இந்த மாதத்திய "தமிழ் நிலம்" தாளிகையை கண்டு மிக உவகையுற்றேன். தாங்கள் என்னுடைய 'பிரெஞ்சு-தமிழ்' அகராதியினைக் குறித்து விரிவாக எழுதியமைக்கு மிக மிக நன்றி. தங்களின் இந்த நல்ல செய்கையானது நான் மேலும் பல பல ஆக்கப் பணிகளில் ஈடு பட ஓர் ஒளியல் ("டானிக்)" போல அமைந்து விட்டது. உங்கள் பெருந்தன்மைக்கு மேலும் ஒரு முறை நன்றி.

ஐயா, தாங்கள் ஆற்றி வரும் தமிழ்த் தொண்டு, தமிழர் தொண்டு நமக்கெல்லாம் பெருமைக்குரியது, போற்றுதற்குரியது, தாங்கள் எல்லா நலனும் பெற்று இனிது வாழ வாழ்த்துகிறேன். நன்றி

தங்களன்புள்ள, — ந. கைலாசம் வணி. மு. குடியேற்றம்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

உணர்வுநிலை உண்மையாகவே இருக்க முடியாது.

விடுதலைப் போராட்டத்திற்கு, காலம் மிகவும் இன்றியமையாதது. ஒரு போராட்டத்திற்கான காலத்தை நாம் உருவாக்க முடியாது; உருவாகும் காலத்தில் போராட்டத்தை நடத்திக்கொள்ள வேண்டும். அந்த முறையில், கடந்த சூலை மாதத்திற்குப் பின், தமிழீழ விடுதலைக் கோரிக்கையை உறுதியறிவிப்புச் (பிரகடனம்) செய்ய காலம் நன்கு கனிந்திருந்தது. மிகக் கனிந்து நின்ற அக்காலம் அமிர்தலிங்கம் குழுவினரின் மெத்தனத்தால் கைநழுவிப் போய் விட்டது. இனி அதனை மீண்டும் எவ்வாறு தோற்றுவிப்பது? நாமே செயற்கையாக ஒரு வன்முறைத் தாக்குதலை உருவாக்க முடியுமா? அமிர்தலிங்கத்திற்கும் இந்திரா காந்திக்கும் மட்டுமே விளங்குகின்ற அந்த அரசியல் தந்திரம், ஏதோ நிலாமண்டிலத்திலிருந்து வந்து விடவில்லை, நமக்கெல்லாம் விளங்காது என்பதற்கு. இப்பொழுதும் சொல்கிறோம், தமிழீழப் போராட்டத்தில் இந்திரா காந்தியின் தலையீடோ, பார்த்தசாரதிகளின் குரங்குநிலை ஒப்புரவு முயற்சிகளோ, தமிழ்ப் பூனைகளுக்கு இன்று மட்டுமன்று, எக்காலத்திற்கும் பயன்படப்போவதில்லை என்பதை அமிர்தலிங்கங்கள் உணரவேண்டும்! பார்ப்பனர்களை உள்ளடக்கிக் கொண்ட எந்தப்போராட்ட முயற்சிகளும், தமிழர்களுக்கு எந்த வகையிலும் முழுப்பயனைத் தந்துவிட முடியாது, இந்திய விடுதலையும், அதன் பின்விளைவுகளுமே அதற்குப்போதுமான சான்றுகள் முதலில், கைநழுவிப் போன கடந்த கால அருமையை நாம் உணர்ந்து விட வேண்டும். அதனை உணர்ந்தபின் அதற்காக நாம் வருத்தப்படாமல், நம் கோரிக்கை தமிழீழந்தான் என்பதை முற்றாகவும் முடிவாகவும் நாம் அறிவித்து விட வேண்டும். சிங்கள பிக்குகளுக்குத் தமிழீழத்திற்குச் செவி சாய்க்காத உறுதியிருக்குமானால், நம் கொள்கையில் நமக்கு ஏன் அவ்வுறுதியிருக்கக் கூடாது? அமிர்தலிங்கம் தம் அறிக்கையில்செயவர்த்தனவின் நிலையைக் கீழ்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார், 'சிங்களத் தரப்பினரின் போக்கு கடுமையாகியுள்ளது. தலைவர் செயவர்த்தன உறுதியுடன் செயல்பட்டு ஒரு தீர்வை ஏற்படுத்தா விட்டால், நிலையான தீர்வைக் காண்பது கடினமாகிவிடும்" — என்பது அது.

நாமும் அமிர்தலிங்கத்திற்குச் சொல்கிறோம்; கேட்டுக் கொள்கிறோம்; வேண்டிக்கொள்கிறோம்; அவரும் உறுதியுடன் செயல்பட்டு, ஒரு தீர்வை ஏற்படுத்தா விட்டால், தமிழீழத் தமிழர்கள் நிலைபான வாழ்வைக் காண்பதே மிகக் கடினமாகி விடும். அந்தத் தீர்வு தமிழீழ விடுதலையே.

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.-671

நினைவிருக்கட்டும்! மே 5,6-இல் பெண்ணாடகத்தில் இருபெரும்மாநாடுகள்!

தமிழீழ விடுதலை ஆதரவு மாநாடு! தேசிய இனங்களின் விடுதலை மாநாடு! கலந்துகொள்ள அணியமாகுங்கள்!

திராவிட சமயமும் இந்து சமயமும்!

மு. தெய்வநாயகம். க.மு.

இனத்தால் பெயர்

'திராவிட சமயம்' என்பது திராவிட இனத்தின் வரலாற்றில் எழுந்த சமயங்கள் எல்லாவற்றையும் மொத்தமாகக் குறிப்பிடும் ஒரு பொதுப் பெயராகும். யூத சமயம், இசரவேலர் சமயம் என்பன இனத்தால் பெயர் பெற்றதைப் போன்று, திராவிட சமயம் என்பதும் இனத்தின் அடிப்படையில் எழுந்த பெயர் ஆகும். திராவிட சமயம் யூதர், இசரவேலர் சமயங்களுக்கும் மூற்பட்டது மட்டுமன்று; அவை தோன்றுவதற்கும் அடிப்படையானது எனலாம்.

இசரவேலர் சமயம், யூதர் சமயம் என்பன எவ்வாறு ஒரு குறிப்பிட்ட இன வரலாற்றோடு இணைந்த சமயங்களாக விளங்குகின்றனவோ, அவ்வாறே, திராவிடசமயமும் திராவிட இனத்தின் நீண்ட வரலாற்றோடு இணைந்து எழுந்ததாகும். இசரவேலரின் இன வரலாற்றை அறியாதவர்களால், யூத, கிறித்தவ, இசுலாமிய சமய வரலாற்றை அறிய இயலாது. அதே போன்று திராவிட இன வரலாற்றை அறியாதவர்களால், உலகப் பெரும் சமயங்களை ஈன்றெடுத்த திராவிட சமயத்தை அறிந்து கொள்ள இயலாது.

புதிய சமயமா?

திராவிட இனம் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒன்று அன்று திராவிட சமயம் என்பதும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒரு சமயம் அன்று. திராவிட இனம் என்று தோன்றியதோ அன்று முதலே திராவிட சமயமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. திராவிட சமயத்தை அறியும் வழி திராவிட இன வரலாற்றை அறிந்து கொள்ளுதலேயாகும். திராவிடர்கள் ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் பரவி வாழ்ந்து வந்தனர். இந்தியாவுக்கு வெளியேயிருந்து ஆரியர் என்னும் கூட்டத்தார் இந்தியாவில் நுழைந்து திராவிடர்களைப் பல்வேறு முறைகளில் வென்று, இந்தியாவின் தென் பகுதிக்குத் துரத்திய காரணத்தால் இப்போது தென் இந்தியாவில் மட்டுமே திராவிடர்கள் அதிகமாக வாழுகின்றனர்.

இந்து என்பது இந்தியச் சமயமா?

இந்தியாவில் வாழும் பெரும் பகுதியான மக்களிடம் 'உங்கள் சமயம் எது?' - என்று கேட்டால் 'இந்து சமயம்' என்று விடை வருகின்றது. 'இந்து சமயம் என்றால் என்ன பொருள்?' என்று கேட்டால், வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகாமல் இந்தியாவில் தோன்றிய சமயம்' என்ற விடை கொடுக்கப்படுகின்றது. இந்தியாவில் சமணம், பௌத்தம், சைவம், வைணவம், சீக்கியம் போன்ற பல சமயங்கள் தோன்றியுள்ளனவே. இவை யாவும் இந்து சமயம் என்பதில் அடங்குமா?

இந்தியாவில் தோன்றிய பௌத்த சமயத்தைப் பின்பற்றும் மக்களெல்லாம் இந்துக்கள் என்ற பெயரைப் பெற வேண்டுமல்லவா? பௌத்த சமய மக்களெல்லாம் இந்துக்கள் என்று அழைக்கப்படுகின்றார்களா? இந்தியாவில் தோன்றிய பௌத்தத்தைப் பின்பற்றும் இந்தியன் ஒருவன் இந்து என்ற பெயரில் அடங்கவில்லையே ஏன்? இந்தியாவில் தோன்றிய பௌத்தத்தைப் பின்பற்றும் சீனர்களும், சப்பானியர்களும் இந்துக்கள் என்ற பெயரைப் பெறவில்லையே ஏன? இந்தியாவில் தோன்றிய சீக்கிய சமயத்தைப் பின்பற்றும் இந்தியன் ஒருவன் இந்து என அழைக்கப்படுவதில்லையே ஏன்?

'இந்து' என்பது இந்தியாவில் வாழும் குடிமக்கள் எல்லோரையுமோ, அல்லது இந்தியாவில் தோன்றிய பல்வேறு சமயங்களைப் பின்பற்றுகிறவர்கள் யாவரையும் மொத்தமாகவோ குறிக்கும் ஒரு பெயர் அன்று என்பது தெளிவாகிறது அப்படியானால் 'இந்து சமயம்' என்பதனுள் அடங்குகின்றவர் யார்?

யார் இந்து?

நாடோடிகளாக வந்த ஆரியர் பல்வேறு முறைகளைக் கையாண்டு திராவிடர்களை வென்றனர். திராவிடர்கள் பரம்பரை பரம்பரையாக ஆரியர்களுக்கு அடிமையாக்கப்பட்டனர். அடிமையாக்கப்பட்ட திராவிடர் என்றுமே விடுதலை அடைந்து விடாதபடி பல்வேறு முறைகளில் 'மூளைச் சலவை' செய்யப்பட்டனர். திராவிடர்களுக்கு மூளைச் சலவை கொடுத்த பெருமை ஆரியப்பிரிவுகளில் பிராமணர்களையே சாரும். பிறப்பால் பிராமணன் உயர்ந்தவன், மற்றவர்கள் யாவரும் தாழ்ந்தவர்கள் என நம்பும்படி வைக்கப்பட்டனர். திராவிடர்களை மட்டும் ஆரியர்கள் அடிமையாக்கவில்லை; இந்தியாவிலுள்ள திராவிடர் சமயங்களையும் ஆரியச் சாயல் பூசப்பட்டது. சமயத்தின் பெயராலும் தாங்கள் பிராமணர்களுக்கு அடிமைகள் என்ற எண்ணம் திராவிடர்களுக்கு ஏற்படுத்தப்பட்டது.

எடுத்துக்காட்டாக 'இந்து' யார்? என்பதை எண்ணிப் பார்ப்போம்.

ஒருவன் கடவுள் உண்டு என்றாலும் இல்லை என்றாலும், மறுபிறப்பை நம்பினாலும் நம்பவிட்டாலும், எவ்வகைக் கொள்கையும் இல்லாதவனாய் இருந்தாலும், பிறப்பால் வரும் சாதி வேற்றுமையை ஏற்றுக் கொண்டு பிராமணர்களே பிறப்பால் உயர்ந்தவர்கள் என்பதை ஒப்புக் கொண்டவன் என்பதற்கு அடையாளமாக அவனுடைய பிறப்பிலேயே, அவனுக்குக் குத்தப்படும் முத்திரையே இந்து என்றாகிறது. அஃதாவது பிறப்பினால் தான், பிராமணனை விடத் தாழ்ந்தவன் என்பதை ஏற்றுக் கொண்டவன் இந்து என்றாகிறது. மற்றவர்கள் இந்தியாவில் தோன்றிய சமயத்தைப் பின்பற்றினாலும், இந்தியர்களாக இருந்தாலும், பிராமண உயர்வையும், தமது பிறப்பின் இழிவையும் ஏற்றுக் கொள்ளாத ஒரே காரணத்தால் இந்து அல்லர் என்று ஆக்கப்பட்டுள்ளனர். அதிலும் சிறப்பாக பிராமண உயர்வை ஏற்றுக் கொள்ளாத, தனி மாந்தனுக்கும், இந்து என்ற முத்திரை குத்தப்பட்டுத் தான் கூறும் கருத்தை நிலைநாட்ட வழியில்லாமல் அவன் அடக்கப்படுகின்றான். கட்டுக்கோப்பான சமயமாக, பிராமண உயர்வை மறுக்கும் சமயங்களைச் சார்ந்தவர்களே, அப்பிடியிலிருந்து விடுதலைபெற இயலும் என்றாகிறது. எடுத்துக் காட்டாக இந்தியாவின் பழங்குடி மக்கள் பௌத்தர்களாகவோ, கிறித்தவர்களாகவோ, இசுலாமியர்களாகவோ மாறினாலொழிய 'பிறப்பால் மிக மிக இழிந்தவர்கள்' என்பதிலிருந்து அவர்கள் விடுபட இயலாதபடி இந்து சமயம் என்பது அவர்களைச் சுருட்டிக் கட்டிப் பிணைத்துள்ளது. தனிப்பட்ட மாந்தர்கள் தங்கள் இழிவைப் போக்கிக் கொள்ள எவ்வளவு முயன்றாலும், அவர்கள் சமயம் இந்து என இருக்கும் வரை, அவர்களுக்கும் அவர்களின் பரம்பரையினருக்கும் இழிசாதி என்பதிலிருந்து விடுதலை இல்லை. பிராமணரல்லாதார், தங்களை எவ்வளவு உயர்சாதியாகக் கருதிய போதிலும் பிராமணர்களுக்கு முன் இந்து சமயப்படி, அவர்கள் இழிசாதியினரே. ஆகவே இந்து சமயம் என்பது எவ்வகைச் சமயக் கொள்கையும் இல்லாமல், பிராமணர்களுடைய உயர்வை ஏற்றுக் கொள்வதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு கருவியாகிறது.

இந்தியாவில் இந்தியப் பெரியவர்களால் உருவாக்கப்பட்ட வைதிகம், சமணம், பௌத்தம். சைவம், வைணவம், சீக்கியம் முதலான இந்தியச் சமயங்கள் உள்ளனவே அல்லாமல் இந்து என்ற ஒரு சமயம் எப்பொழுதும் இல்லை. இப்பேதும் இல்லை. ஆங்கிலேயர் வரவுக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட இந்தியாவில் இந்தியச் சமயங்கள் எல்லாவற்றுக்கும் பொதுப் பெயர். இந்து சமயம் என்றால், ஆசியச் சமயம், ஐரோப்பியச் சமயம், அமெரிக்கச் சமயம் என்று சமயங்கள் இருக்க வேண்டுமல்லவா?

வேதமுறைப்படி, யாகங்கள் செய்து ஆடு மாடுகளின் இறைச்சியை உண்ணுமலும், வேதமுறைப்படி சோமக் குடிப்பாகிய மதுவைக் குடியாமலும், வேத வழியாகிய வைதிக சமயத்திலிருந்து, சைவம், வைணவம் முதலான சமயங்களுக்கு மாறி வேறு சமயங்களைக் கைக்கொள்ளும் பிராமணர்கள், தங்கள் சாதியை உயர்ந்தது எனக் காட்டுவதற்காக இந்து என்பதைத் தங்களுக்குத் தக்கவாறு திரித்துப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தியச் சமயங்களான பௌத்தம், சீக்கியம் முதலிய சமயங்களை இந்து சமயம் வெறுத்து ஒதுக்குவதும், பௌத்தர்களாகத் தங்களை அறிவித்துள்ள இந்தியப் பழங்குடியினர்க்குரிய உரிமைகளை மறுப்பதும், பிராமணர்களின் திட்டமிட்ட சூழ்ச்சியும் ஏமாற்றும் ஆகுமல்லவா?

சைவம், வைணவம், சமணம், பௌத்தம், சீக்கியம் போன்று இந்து சமயம் இந்தியர்களால் தோற்றுவிக்கப்பட்டதன்று இந்தியாவுக்கு வெளியிலிருந்து வந்த வேற்று மக்கள் இந்தியாவில் வாழ்ந்த மக்களை 'இந்தியா' எனவும், இந்தியச் சமயங்கள் எல்லாவற்றையும் சேர்த்து 'இந்து சமயம்' எனவும் அழைத்தனர்.

கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரை இந்தியர், இந்து சமயம், என்ற பெயர்கள் தமிழர்களையும் அவர் சமயத்தையும் குறிக்கவில்லை. ஆங்கிலேயர்கள் இந்தியா முழுவதையும் வென்று, ஒரே இந்தியாவை உருவாக்கிய பின்னரே, தமிழர்களுக்கு இந்தியர் என்ற பெயரும், தமிழர் சமயங்களுக்கு 'இந்து சமயம்' என்ற பெயரும் ஏற்படலாயின.

ஆரியர் — திராவிடர் உறவு

வெளிநாட்டினர்கொடுத்தஇந்துசமயம்என்றபெயர், வெளியிலிருந்து வந்து இந்தியாவில் குடியிருந்த ஆரியர்களுக்கு, மிகவும் ஏந்தாகத் தற்காலத்தில் பயன்பட்டு வருகின்றது. வெளிநாட்டிலிருந்து வந்து நம்மை அடிமைப்படுத்திய ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்ற இந்திய மக்கள், வெளிநாட்டிலிருந்து பிழைப்பைத் தேடி நாடோடிகளாய் வந்த ஆரியர்களிடம் 'இந்து சமயம்' என்ற பெயரால நன்றாக அடிமைப்பட்டுள்ளனர். ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் திராவிடர்களே சிறந்த நாகரிகத்துடன் குடியிருந்தனர் என்பதையும், அவர்களின் சமய வழிபாட்டுமுறைகளையும் அரப்பா, மொகஞ்சதாரோ புதைபொருள் ஆய்வுகள் நமக்குப் புலப் படுத்துகின்றன.

இந்தியாவுக்கு வெளியேயிருந்து ஆடுமாடுகளை மேய்க்கும் நாடோடிகளாக ஆரியர் கைபர், போலன் கணவாய்கள் வழியாக இந்தியாவுக்குள் வந்து, திராவிடர்களோடு பழகலாயினர். திராவிட இன உறவால் சமய உண்மைகளை அறியலாயினர். அதன் காரணமாக ரிக் போன்ற நான்கு வேதங்களும், இந்தியாவில் (திராவிடரின் உறவால்) உருவாகலாயின. இவ்வேதங்கள் உருவாவதற்குக் காரணமான இறையுணர்வை ஆரியர்களுக்குப் புகட்டியவர்கள் திராவிடர்களேயாவர். திராவிடர்களின் உறவைப் பெறாத இந்தியாவுக்கு வெளியேயுள்ள ஆரியர்களிடம் இத்தகைய வேதங்கள் எதுவும் உருவாகவில்லை என்பது எண்ணிப் பார்க்கத்தக்கது.

திராவிடக் கிளை

இந்தியா முழுவதும் வாழ்ந்த திராவிடர்கள், இந்தியாவுக்கு வெளியேயும் சென்று பரவி இறையுணர்வை மற்ற மக்களுக்கும் பரப்பியுள்ளனர். 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் நாட்டுத் தேக்குமரம் கிடைத்துள்ள 'ஊர்' என்ற திராவிடக் குடியிருப்பிலிருந்து, திராவிட வணக்கத்தையும், பண்பாட்டையும் உடைய ஆபிரகாம் என்னும் ஒருவன், கானான் என்னும் நாட்டை நோக்கிச் சென்று இறை வணக்கத்தைப் பரப்பியமையை பைபிள் கூறுகிறது.

ஆபிரகாமின் பேரனை இசரவேல் என்பவன் பெத்தேல் (கோவில்) என்னுமிடத்தில் அடையாளமாகக் கல் நட்டு அதற்கு எண்ணெய், நீர்மபலி ஊற்றியதற்கும், தமிழர்களின் சிவ(க்குறி) வணக்கத்திற்கும் வேறுபாடு இல்லை. புனித இடமான கோவிலில் (பெத்தேல்) தங்கும் இறைவனைக் காட்டும் குறிகளாக அவை அமைக்கப்பட்டன. திராவிடப் பண்பாட்டையுடைய அந்த ஆபிரகாமின் வழிவந்த திராவிடத்தின் கிளைச் சமயங்களே யூதம், கிறித்துவம், இசுலாமியம் ஆகிய மூன்றுமாகும்.

வேள்வியும் நிறைவேற்றமும் :

இந்தியாவில் புகுந்த ஆரியர்கள் வேள்வியின் பெயரால் ஆயிரக்கணக்கான ஆடுமாடுகளைக் கொன்று தின்றதுடன், சோமக்குடிப்பு என்னும் மதுவையும் குடித்து, கொலையும், மதுவுமே சிறந்தவை என மக்களை-சிறப்பாக அரசர்களை-வேதங்களின் மூலமாக நம்பவைக்க முயன்ற போது கொல்லாமை, புலால் மறுத்தல்-ஊன் உண்ணாமை இவற்றின் அடிப்படையில் திராவிடப் பெரியவர்கள் ஆரியர்களின் கொலை வேள்விக் கொள்கையை மறுத்து, வேள்வி மறுப்புக் கோட்பாட்டையும், கடவுள் மறுப்புக் கோட்பாட்டையும் உடைய சமண, பௌத்த சமயங்களைத் தோற்றுவித்தனர்.

திராவிடர்களின் சமண பௌத்த சமயங்களின் முன்னர் நிலைநிற்க இயலாது, ஆரியர்களின் நான்கு வேதங்களையுடைய கொலை வேள்விக் கொள்கை வீழ்ச்சியடையலாயிற்று.

திராவிடச் சான்றோனாகிய ஆபிரகாம் வழியில் தோன்றிய யூத சமயத்தின் கொலை வேள்வியை நிறுத்தும் நோக்குடன் 'இயேசு கிறித்துவின் குறுக்கத்தில் (சிலுவையில்) வேள்வி (பலி) நிறைவேறிவிட்ட காரணத்தால், வேள்வி இனி தேவையில்லை' என்ற வேள்வி நிறைவேற்றக் கோட்பாட்டின் அடிப்படையில் எழுந்த கிறித்தவம் உலகெங்கும் பரவலாயிற்று.

(தொடர்ச்சி 5-ஆம் பக்கம்)

கானின் விலங்கும் அடிமை கடிந்தொதுக்கும்!

திராவிட சமயம் . . . (தொடர்ச்சி)

இயேசு கிறித்துவிற்கு முன்னர் உலகம் முழுவதும் கடவுளை வணங்கிய அத்தனை பேரும், அவர்கள் எச்சமயத்தைச் சார்ந்தவர்களாயினும் உயிர்களைப் பலியிட்டே வணங்கி வந்தனர்.

உயிர்களைப் பலியிடாமல் கடவுளை வணங்கும் புதிய கொள்கையை உலகுக்குக் கொடுத்த பெருமை கிறித்தவத்தையே சாரும்.

திரும்பிய திராவிடக் கிளை :

திராவிடத்தின் கிளைச்சமயமான யூதத்திலிருந்து தோன்றிய கிறித்தவம், இயேசுகிறித்துவின் பன்னிரு மாணவர்களில் ஒருவரான தோமாவினால் கி.பி. முதல் நூற்றாண்டில் திராவிடத் தமிழ்நாட்டில் பரப்பப் பட்டது.

கடவுள் கொள்கையுடையதாய், வேள்வியின் சிறப்பை ஏற்றுக் கொண்டதாய், கொலை வேள்வி இல்லாததாய் கொல்லாமை, புலால் மறுத்தலுக்கு ஆதரவானதாய் இப்புதிய சமயம் திராவிட (தமிழ்) நாட்டில் பரவிய காரணத்தால் எல்லாப் பகுதியினரின் ஆதரவையும் பெற்று வேகமாக புதிய, இயக்கமாக இது வளரலாயிற்று.

நான்கு வேதங்களின் கொலை வேள்வியையும், புலாலுணவையும் கைவிட்டு ஆரியர்கள் இப்புதிய சமயத்தில் இணைந்தனர். கடவுள் மறுப்புக் கோட்பாட்டைக் கைவிட்டுச் சமணர்களும் பெளத்தர்களும் அணி அணியாக இப்புதிய இயக்கத்தில் பங்கு பெற்றனர்.

பக்தி இயக்கம்

கி.பி. ஆறும் நூற்றாண்டளவில் தமிழகத்தில் உருவான இவ்வியக்கமே பக்தி இயக்கமாகும். இப் பக்தி இயக்கத்தினால் உருவாக்கப்பட்ட சமயங்களே சைவமும், வைணவமும் ஆகும்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் சைவ சமயத்தின் மெய்ம்மங்(தத்துவங்)களாக அத்வைதம் (சேர நாடு), சைவ சித்தாந்தம் (சோழ நாடு) ஆகிய இரண்டுக்கும் வைணவ சமயத்தின் மெய்ம்மங் (தத்துவங்)களாக விசிட்டாத்வைதம் (தொண்டை நாடு), துவைதம் (கன்னட நாடு) ஆகிய இரண்டுமாக, மொத்தம் நான்கு மெய்ம்மங்கள் (தத்துவங்கள்) திராவிட சமயத்திலிருந்து திராவிட நாட்டில் உருவாகி வடநாட்டிற்குப் பரவலாயின.

சைவ சமயம் எழுவதற்குக் காரணமான 63 நாயன்மார்களும், வைணவ சமயம் எழுவதற்குக் காரணமான பன்னிரு ஆழ்வார்களும் ஆகிய இவர்கள் யாவரும் தமிழகத்தை மட்டும் சார்ந்தவர்கள் என்பது எண்ணிப் பார்க்கத்தக்கது.

வைணவர்களின் வேதமாகிய நாலாயிரத் திவ்யப் பிரபந்தபத்திற்குப் பெயர் 'திராவிட வேதம்' என்பதாகும். சைவர்களின் பன்னிரு திருமுறைகளில் முதல் ஆசிரியர் 'திராவிட சிசு' என அறியப்பட்டார். 'சைவ சித்தாந்த சாத்திர' விளக்கம் 'திராவிட மாபாடியம்' எனப் பெயர் பெற்றது.

திராவிட சமயக் கிளைகள்

ஆகவே திராவிட சமயமாகிய அடிமரத்திலிருந்து தோன்றிய கிளைகளே, நான்கு வேதங்களையுடைய வைதிக சமயமும். அதை எதிர்த்து எழுந்த பெளத்த, சமண, சமயங்களும் திராவிட இனப் பண்புடைய ஆபிரகாமிலிருந்து தோன்றிய யூத கிறித்தவ இசுலாமிய சமயங்களும், கிறித்தவத்தின் திராவிடக் கிளைகளான சைவ வைணவ சமயங்களும் ஆகும்.

உலகப் பெரும் சமயங்கள் யாவும் ஆசியாக் கண்டத்தில் மட்டுமே தோன்றியுள்ளன. ஐரோப்பியரையும், அமெரிக்கரையும், ஆத்திரேலியரையும் நாகரிகமுடையவர்களாக ஆக்கிய பெருமை ஆசியாக் கண்டத்தில் தோன்றிய திராவிட சமயத்தின் கிளையான கிறித்தவ சமயத்தையே சாரும்.

ஆசியாக் கண்டத்தின் இந்திய நாட்டிலும், இந்தியாவுக்கு அருகிலும், உலகப்பெரும் சமயங்கள் யாவும், திராவிட இனத்திலிருந்து உருவான திராவிட சமயத்தின் கிளைகளாகவே விளங்குகின்றன என்பது வரலாற்று உண்மையாகும்.

— தொடரும்.

நன்றி. திராவிட சமயம், மலர்-1;இதழ்-1.

உ.த.மு.க
உறவு மடல்.

வரவேற்கிறோம்.

— பறம்பை அறிவன் —

இனிய தோழர்களே,

உலகம், தமிழ், இனம், கழகம்-நான்கு சொற்களின் பொருளாகவும், உறவாகவும், செயலாகவும் நாம் மாற்றம் பெறுவோம். அந்த மாற்றத்தினை வேகப்படுத்தும் உந்துதிறனாக உள்ளவர் பெருஞ்சித்திரனார். அவர் சென்று வந்த செலவினைத் தமிழர்கள் மதிப்பீடு செய்தல் வேண்டும். அவ்வாறே, ஒப்பீட்டளவிலும், உள்ளுணர்விலும் தமிழர் தெளிவு பெறுதல் இயலும். அவர் தனிமாந்தர் அல்லர். அவர் ஓர் இயக்கம். அதன் இயங்கியலை அறிந்து கொள்வதால் தேசியச் சிக்கலும் அதனைத் தீர்வு காண்பதும் புரிய வரும்.

ஈழம், அசாம், வங்கம் ஏன், கிரெனடா, சினி கியூபா, பாலசுத்தீனம் எங்கும் உள்ள மாந்த இன உறவுகளின் 'சாரங்களை'ப் புரிந்து கொள்ள வேண்டிய கட்டாயம் தமிழர்க்கு வாய்ந்துள்ளது.

உலக மக்கள் வரலாற்றிலிருந்து தமிழரைப் பிரித்து வைக்க முடியாது. அந்த வரலாற்றின் பகுதியாகவும் முன்னோடியாகவும் தமிழர் வரலாறு தொடர்ந்திருப்பதை நாம் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

ஈழச் சிக்கல் தமிழ்நாட்டில், பாரதத்தில் எங்கும் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. இச் சிக்கலைத் தீர்க்கத் 'தமிழினம்' என்ற உரிமையில் உள்ள கடமைகளும், மாந்த நேய ஒருமைப்பாட்டில் சில தீர்வுக்கான உதவிகளும் நாம் செய்தல் வேண்டும்.

இந்திய அரசைத் தலையிட வைக்க, "இலங்கை மீது படையெடு", என்ற முழக்கம் உருவாக்கப் பட்டிருத்தல் வேண்டும். அது சரியா? இந்த உத்தியின் எதிர்விளைவுகள் பற்றியும் கவனமாக ஆராய்தல் வேண்டும். தி.மு.கவும், நெடுமாறனும் எழுப்பிய இச்சிக்கலைப் பற்றி அவர்களின் வாய்ப் பிறப்பிலேயே கேட்டறிதல் வேண்டும். அனைத்து நாட்டுப் பேரவையை ஈர்ப்பதற்காக எடுத்த ஒரு கோடி கையெழுத்தியக்கம் கூட மேற்கூறிய வகையிலேயே சேரும்.

அ.தி.மு.க அரசு, 'ஈழத்தமிழர்களுக்கு' எந்த வகையிலான உதவியைச் செய்யும் என்பது பற்றியும் நாம் தெளிவு பெறமுடியவில்லை.

ஈழம் பற்றிய செய்திகள்-'சிறையுடைப்பு', 'ஈழத் தமிழ் வானொலி' பற்றியவை-நம்பிக்கை ஊட்டுவனவா? இல்லை, அவை நிகழ்ந்த முறை பற்றிய அறிவிப்புகள் உவப்பானவையா?

நாம் ... பொறுப்பள்ளவர்களாக நடக்க வேண்டும். என்றாலும், எதிர்ப்பிலிருந்தும், உடன்பாட்டிலிருந்தும் வருகின்ற கருத்துகளை வரவேற்கிறோம் ... தெளிவுக்காக!

உருசியாவில் அவரவர் தாய்மொழிகளின் வழியாகவே கல்வி கற்பிக்கப்பெறுகிறது.

கல்வி, தாய்மொழி மூலம் கற்கப்பட வேண்டும் என்னும் கோட்பாடு சோவியத்து ஒன்றியத்தில் முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறது. தேசியப் பள்ளிகளில் குழந்தைகள் தொடக்க எழுத்துகளிலிருந்து அறிவியல் பாடங்கள் வரை எல்லாவற்றையுமே தாய்மொழியில்தான் கற்றுக் கொள்கிறார்கள்.

இதுவுமன்றி அங்குள்ள பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்குப் பாடப் பொத்தகங்கள் இலவயமாகவே வழங்கப் பெறுகின்றன.

பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தில் தாய்மொழிக் கல்விக்கு வழியமைந்துள்ளதைப் போலவே, தாய்மொழி இலக்கியத்திற்கும் கணிசமான அளவு நேரம் ஒதுக்கப்பெறுகிறது.

கேள்போல் பகைவரை வீழ்த்திடு!

கொடுமுடி பாவலர் க அ. பிரகாசம் (ஒளியவன்.)

நடப்பது நடக்கட்டும் நடடா!-ஒரு
நாள்வரும் வாளினை எடடா!-அட,
கிடப்பது கிடக்கட்டும் போடா!-அந்தக்
கீழ்களை மிதித்து,நீ வாடா!

இறவினைச் சொல்லியே வருவார்!-அவர்
உன்னையே கொல்ல வாள் தருவார்!
அறவினை அறவினை என்பார்'-அட,
அழிவினை யேசெய்து மகிழ்வார்!

நாய்களைப் போல்குரைத் தெழுவார்!அந்த
நாய்களின் நன்றியில் லாதார்!
பேய்களைப் போல்அலை வுறுவார்!கூடிப்
பேசிக் கழுத்தை அறுப்பார்!

இனநலம் இயல்நலம் இல்லார்-இவர்
இழிவில் லாதெதும் சொல்வார்!
தனிநலம் தன்னலம் என்றே-பல
சழக்குகள் புரிகுவர் நன்றே!

புற்றினைச் செய்தது சிதலை-அதில்
புகுந்துகோ லோச்சவோ அரவு?
பற்றினை வைத்திடு பண்பில்!-கேள்போல்
பகைவரை வீழ்த்திடு வீழ்த்திடு!

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"வள்ளற்பெருமான் இராமலிங்க அடிகளாருடன் அப்போதிருந்த சங்கராசாரியார் ஒருமுறை உரையாடிய போது, சமற்கிருதமொழிதான் எல்லா மொழிகளுக்கும் தாய்மொழி என்று குறிப்பிட்டாராமே!"

"ஆமாம். அதற்கு வள்ளற்பெருமான் என்ன கூறினார் தெரியுமா? சமற்கிருதம் தாய்மொழி என்றால் தமிழ் தந்தை மொழி என்றாராம்.'

"அதாவது, தந்தையில்லாமல் குழந்தை பெறும் தாய் என்பவள் இல்லை அது போன்றே தமிழ் இல்லாமல் பிறமொழிகளின் பிறப்பு இல்லை-என்பது தானே அதற்குப் பொருள்?"

"ஆமாம்."

"அன்று வள்ளற்பெருமான் சொன்னதை இன்றுள்ள சங்கராச்சாரியார் அப்படியே மாற்றிச் சொல்லியிருக்கிறாரே! "தமிழ்மொழி தாய்மொழி என்றால் சமற்கிருதமொழி தந்தைமொழி" என்று பேசியிருக்கிறாரே!"

"அப்படியா?"

"ஆமாம். இதற்குத்தானே அண்ணா, புரட்டு என்று பெயர்."

"எனக்குத் தெரியாது தம்பி!" — தமிழவேள்.

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
தனியிதழ் :	1 25 ,,	3 ,,	3 ,,
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	18 ,,

வானப் பெருந்தமிழர் வல்லடிமை தாங்குவதோ?

அகம் கரியார்

— தமிழவேள் —

7. ஒரே பொதுமொழி!

'செந்தமிழ்ச்செல்வி பழைய இதழ் ஒன்றில் தமிழ்நலம் விழைவோன் என்பவர் இப்படி எழுதியிருக்கிறார்!

'பாம்புக்குப் பல்லிலும் தேளுக்கு வாலிலும் நஞ்சுண்டு. ஆனால் தமிழைப் பேசித் தமிழை இகழும் வகுப்பினருக்கு உடலெல்லாம் நஞ்சுபரவியிருக்கிறது. பாம்பு கடித்தவனுக்கு மிளகாய்க்காரம் தோன்றாதது போல், ஆரிய நஞ்சு ஏறிய சில தமிழருக்குப் பார்ப்பனச் சூழ்ச்சியின் கொடுமை விளங்கவில்லை' என்கிறார்.

பழைய நிகழ்ச்சிகளை மட்டுமல்ல இன்று நம் கண்முன் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் நன்கு கவனித்துப் பார்த்தால் தமிழ்நலம் விழைவோனின் கூற்றிலுள்ள உண்மை நன்கு புலப்படும்.

'தமிழ்நாடே வடமொழியின் தோல்விக்களம்' என்று குறிப்பிடுகிறார் ஆங்கிலநாட்டுத் தமிழ் அறிஞரான கால்டுவெல் அவர்கள்.

வீட்டிலும் வெளியிலும் பேசும் மொழி எழுதும் மொழி தமிழாக இருப்பினும், அதனைச் சூத்திர மொழியாகவும், வட மொழியையே தேவமொழியாகவும் கருதிக்கொண்டிருப்பவர்களுக்கு, வடமொழி தமிழ்நாட்டில் தோற்றுப்போவதைக் கண்டு மனம் கொதிப்படைகிறது. அதனால் அவர்கள் தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தமிழையும் தமிழரையும் தமிழ் உணர்வையும் அழிப்பதற்குத் தங்களால் ஆன அனைத்தையும் துணிந்து செய்கிறார்கள். இதனைத் தமிழர்களில் சிலர் இன்னும் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்களே என்பதை நினைத்துத்தான் இரக்கப்படவேண்டியுள்ளது.

இந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்துவதன் மூலம் தமிழை அழிக்கலாம் என்பது அவர்கள் எண்ணமாக இருக்கிறது! அதனால் தான் இராசகோபாலாச்சாரியார் முதல் முதல் சென்னை மாநில முதல்வராக வந்த போதே, 1938-இலேயே, இந்திப்படிப்பைத் தமிழ் நாட்டில் கட்டாயமாக்கினார். ஆனால் அந்த முயற்சியைத் தமிழர்கள் முறியடித்துவிட்டார்கள். மீண்டும் ஒருமுறை அவர் முதல்வராக வந்தபோது 'குலக்கல்வித்திட்டம்' என்ற ஒன்றைக் கொண்டுவந்து, தமிழினக் குழந்தைகள் கல்வி கற்பதைத் தடை செய்யப்பார்த்தார். அந்த முயற்சியையும் தமிழர்கள் தோற்கடித்துவிட்டார்கள். அப்போதுதான் காமராசர் முதல்வராக வந்தார்.

இன்றும் அத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இல்லை. இலவய இந்தி வகுப்புகள் என்ற பெயரில் தமிழ்நாட்டில் இந்தியைக் கற்பிப்பவர்கள் யார்? இந்திய ஒற்றுமை என்ற பெயரில் இந்தியைப் பொது மொழியாகத் தமிழர்கள் ஏற்கவேண்டும் என்று எழுதியும் பேசியும் வருபவர்கள் யார்?

தமிழன் அறியாமையிலேயே ஆழ்ந்து கிடக்க வேண்டும். அவனை அறியாமையிலேயே ஆழ்த்தி வைத்திருக்க வேண்டும். அவனுக்கு மொழிப்பற்றோ இனப்பற்றோ ஏற்பட்டுவிடக்கூடாது என்றஎண்ணத்தில் பல மாத இதழ்களையும் கிழமையிதழ்களையும் நடத்திவருபவர்களில் ஒருவர் இந்தோனேசியா சென்று வந்தபோது எழுதிய எழுத்துகள் இவை:

இந்தோனேசியாவின் 'அதிசயிக்கத்'தக்க ஒற்றுமைக்கு இவைதாம் காரணம்: ஒரு தலைவன் — ஒருகொடி — ஒரேமொழி இதுதான் மந்திரம்.

கிட்டத்தட்ட இந்தோனேசியாவைப் போன்றதுதான் நம் நாடு(?). பெயரிலும்கூட ஓர் ஒற்றுமை இருக்கிறது. ஆனால் இங்கே என்னால் அந்த அபூர்வ ஒற்றுமையை மக்களிடம் காணமுடியவில்லை!

நமக்கு உன்னதமான தலைமை இருக்கிறது. ஒரே கொடியும் இருக்கிறது. ஆனால் எல்லோரையும் இணைக்க ஒரேமொழிதான் இல்லை. அதுதான் நம்முடைய குறை!'

'எந்த மொழி வேண்டுமானால் இருக்கட்டும். அஃது ஒரு பொதுமொழியாக இருக்கட்டும். அது நமக்கு மிகவும் அவசியம். தாய்மொழிப்பற்று இருக்கவேண்டியதுதான், ஆனால் நாட்டுப்பற்று வளம்பெற இப்படி ஒரு பொதுமொழி நம் எல்லோரையும் சேர்த்து அரவணைக்க வேண்டியது மிக அவசியம். அப்போதுதான் நம்முடைய ஒற்றுமைக்கு முழுமை கிடைக்கும் இந்தியன் என்ற முழு உருவம் கிடைக்கும்......'

'இப்போதும் எண்ணிப்பார்க்கிறேன், இந்திய மக்களுக்கு அந்தப்பேறு என்று கிடைக்குமோ!'

சுற்றி வளைத்து நயமாக அவர் கூறுவது என்னவென்று தெரியவில்லையா? தமிழன் இந்தியைப் பொதுமொழியாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதுதானே? இந்திய ஒற்றுமைக்காக உலகத்தின் தென்மொழியும், இன்றுவரை உயிருட்டமுடையதுமான தமிழ்மொழியையோ, அல்லது உலக மொழி என்று சொல்லுமளவுக்குப் பரந்துள்ள ஆங்கில மொழியையோ வடமாநிலத்து மக்கள் ஏற்பார்களா? அப்படி ஏற்குமாறு அங்குள்ள எந்த எழுத்தாளராவது எழுதியிருக்கிறாரா? என்பதைத் தமிழர்கள் கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அண்மையில் தமிழ்நாடு இந்தி பரப்புவோர் மாநாடு என்று ஒரு மாநாடு திருச்சியில் நடைபெற்றதே அதனை நடத்தியவர்கள் யார்? அந்த மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானம் என்ன?

'அனைத்திந்திய வானொலி நிலையத்தை 'ஆகாசவாணி' என்று மீண்டும் பெயரிட வேண்டும். தொலைக்காட்சி நிலையத்தில் இந்திச் செய்தி ஒலி பரப்பப்படவேண்டும். மதுரை, திருச்சி, திருநெல்-வேலி வானொலி நிலையங்களிலிருந்து இந்திப் பாடல்களை ஒளிபரப்ப ஏற்பாடு செய்யவேண்டும். குறைந்தது ஐந்து மாணவர்கள் இந்தி கற்க முன்வந்தால் கூட எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இந்தி கற்பிக்க தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்யவேண்டும்'.

இவ்வளவு தெளிவாகத் தங்கள் உள்ளத்தை அவர்கள் காட்டியிருந்தும் தமிழர்கள் சிலருக்கு உண்மை விளங்கவில்லையே!

சில ஆண்டுகளுக்கு முன் கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலையின்போது தமிழ்நாட்டில் இருந்த அரசு விலக்கப்பட்டுத் தில்லியின் நேரடி ஆட்சி வந்ததல்லவா? அப்போது அதிகாரம் யார் கையில் இருந்தது? அந்த அதிகாரத்தால் அவர்கள் என்-னென்ன செய்தார்கள்? என்பதெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு வாழும் சிலரைத் தவிர மற்றவர்களுக்குத் தெரியாதா என்ன?

ஒன்றைமட்டும் குறிப்பிடுகிறேன். அண்ணா போக்குவரத்துக்கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகம் என்று பெயரிடப்பட்ட போக்குவரத்துக்கழகங்களைச் சேர்ந்த பேருந்துகளில் பெரிய எழுத்துகளில் 'அண்ணா' என்றும் 'பெரியார்' என்றும் எழுதப்பட்டிருந்ததல்லவா? நெருக்கடி நிலையின் போது அந்தப் பெரிய தமிழ் எழுத்துகள் ஏன் மறைந்தன? அந்த இடத்தில் 'ATC' என்றும் 'TPTC' என்றும் ஆங்கில எழுத்துகள் ஏன் எழுதப்பட்டன? அவ்வாறு செய்ய உத்தரவிட்டவர்கள் யார்? அவ்வாறு உத்தரவிட்டதன் நோக்கம் என்ன? அண்ணா பெரியார் என்ற பெயர்களைப் பார்க்கக்கூட அவர்களுக்கு மனம் பொறுக்கவில்லையே! அந்த இரு சொற்களும் தமிழனுக்கு இனஉணர்வை ஊட்டிவிடும் என்ற அச்சமும், அந்த இருபெயர்களும் தமிழர் தம் கண்ணில்படாமல் இருந்தால் அவர்களுடைய இனஉணர்வு மங்கிவிடும் என்ற எண்ணமும்தானே அவர்களை அப்படிச் செய்யவைத்தது?

மீண்டும் தேர்தலுக்குப்பின் திராவிட இயக்கத்தின் ஆட்சியே ஏற்பட்டதால்தானே அண்ணா பெரியார் என்னும் எழுத்துகள் பேருந்துகளில் முன்போல் இடம் பெற்றன?

ஒரு கூட்டத்தினர் தமிழ்ப்பற்றோ தமிழின உணர்வோ அற்றவர்கள் என்று குறைகூறப்பட்டால் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தாமே முன் வந்து 'ஏன் அப்படி எங்களைக் குறைகூறுகிறீர்கள்?' என்று கேட்கவேண்டும். அப்படிக் கேட்க அவர்களில் ஒருவருக்குக்கூடவா தமிழ் உணர்வு இல்லை? அதனைக் கேட்பதற்குக்கூட ஒரு தமிழன்தானா முன் வரவேண்டும்!

தமிழ் மொழி பற்றித் தந்தை பெரியார்

இந்தியால் தமிழ் வளர்ச்சி குன்றும்!

இந்தியைப் பொது மொழியாக்குவதால் நாட்டிற்கு நன்மையில்லை. அதனால் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையுண்டாகும், தமிழ் மொழியின் வளர்ச்சியும் குன்றும்.

பெரியார். குடியரசுக்கட்டுரை. 1926.

திராவிட மொழிகள்

'என் சிற்றறிவிற்கு. என் பட்டறிவிற்கு' ஆராய்ச்சிக்கு எட்டிய வரையில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய நான்கும் தனித்தனி மொழிகளென்றோ, அல்லது தமிழ் தவிர மற்ற மூன்றும் தமிழிலிருந்து பிரிந்த மொழிகளென்றோ தோன்றவில்லை, ஒரேமொழி அஃதாவது தமிழ்தான் நான்கு இடங்களிலும் நான்குவகையாகப் பேசப்பட்டு வருகிறது என்றே நான் கருதுகிறேன்.

—பெரியார்.

தமிழ் மொழிப்பற்று தேவை!

ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாய பற்று மொழிப்பற்றேயாகும். மொழிபபற்று இராதவரிடத்து நாட்டுப்பற்று இராதென்பது உறுதி. நாடு என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. தமிழ் நாட்டில் பிறந்தவர்களுக்கு —தமிழர்களுக்குத் தமிழ் மொழிப் பற்று கட்டாயம் தேவை, தேவை என்று சொல்லுகிறேன்.

வங்காளிக்கு வங்கமொழியில் பற்றுண்டு; மகாராட்டிரனுக்கு மகாராட்டிர மொழியில் பற்றுண்டு ஆந்திரனுக்கு ஆந்திரமொழியில் பற்றுண்டு. ஆனால் தமிழனுக்குத் தமிழ் மொழியில் பற்றில்லை. இது பொய்யோ? தமிழ்நாட்டில் தமிழ்ப்புலமை மிகுந்தவர்கள் எத்தனைப்பேர் என்று கணக்கெடுத்தால் உண்மை விளங்கிப்போகும் தாய்மொழியில் பற்றுச் செலுத்தாதிருக்கும் வரை தமிழர்கள் முன்னேற்றமடைய மாட்டார்கள்

—பெரியார். 1924 திசம்பர். திருவண்ணாமலைப் பேராயக் கட்சி மாநாட்டுச் சொற்பொழிவு.

(3-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

இலங்கையிலிருந்து அண்மையில் இலண்டனுக்கு வந்து குடியமர்ந்த தமிழ் மருத்துவர் ஒருவரும், இலண்டன் தமிழர் நடவடிக்கைக் குழுவைச் சேர்ந்த திரு. மகரசிங்கமும் இக்குழுவின் பிற உறுப்பினர்களாவார்கள் இவர்கள் மூவரும் அமைச்சரிடம் ஒன்றரை மணிநேரம் வழக்காடித்தம் கருத்துகளை அவர்க்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் அமைச்சர், இலங்கையில் இன்னும் பொது அமைதி ஏற்படவில்லை என்பதை விளங்கிக் கொண்டார் என்றும், மாந்த உரிமைகள் மறுக்கப்படுகின்ற நிலையில் அரசியல் அடைக்கலம் தேடி இலண்டன் வந்துள்ள இலங்கைத் தமிழர்களை, உலகஒன்றிய அவையின் கொள்கை உறுதிகளின்படி, பிரிட்டிசு அரசு நாடு கடத்தாது என்று அமைச்சர் உறுதியளித்துள்ளதாக இலண்டன் செய்தியாளர் உதயதாரகை தெரிவிக்கின்றார்.

— ஈழநாடு. 18-3-84

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம, அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/CJ/657

அனுப்புதல்: பெறுநர். தாள்-அஞ்சல்
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு, திரு/திருவாட்டி
திருவல்லிக்கேணி,
சென்னை—5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம். 5. அருணாசலத் தெரு, சென்னை-5.